# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8033608

1. District மாவட்டம் : நாமக்கல் PS: உ.த.க. பிரிவு காவல்நிலையம் நாமக்கல் Year: ஆண்டு 2017 FIR No.: மு.த.அ. எண் 07/AC/17 Date: நாள் 04.11.2017

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 Sections பிரிவுகள்: 7 மற்றும் 12
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from நாள் முதல் (1) 26.10.2017 காலை மாலை 10.00 மணி
   Date to : நாள் வரை (2) 02.11.2017 மதியம் மாலை 01.00 மணி.
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல் மற்றும் மதியம் 03.00 மணி
   Time to : நேரம் வரை (3) 03.11.2017 மதியம் 15.00 மணி முதல் 16.25 மணிக்கு இடைப்பட்ட காலத்தில்.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.11.2017 Time : நேரம் 15.00 மணி.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume IV Time : நேரம் 15.00 மணி.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 35 கி.மீ வடகிழக்கு.
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி வட்டாட்சியர் அலுவலகம், இராசிபுரம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் சு. அசோக்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் துரைசாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது. 24
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் சுய தொழில்
   (g) Address : முகவரி க.எண்: 4/12 சேலைப்பட்டி, தி.சௌதாபுரம், இராசிபுரம் (T.k) நாமக்கல் (Dt)

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு. ரத்தினம், வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், இராசிபுரம்
   2) திரு. பாலசந்திரன், உதவியாளர், வட்டாட்சியர் அலுவலகம், இராசிபுரம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   முன் விசாரணை மேற்கொண்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்புகிறது.

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ……………..…………. பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 4.11.17

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் [signature] 4/11/17

தெ.வெ. கிருஷ்ணா ராஜன்
Name: பெயர் காவல் நிலைய [illegible]
Rank: நிலை …………………No. எண் ……….
நாமக்கல். [illegible]

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
04.11.2017 at 16.30 Hrs.

* GCP-240-34(Type 2) 90,000 Cps 21.3.16(HCL-12)p.2

C. Priyan [signature]
HC 912
04.11.2017.

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/AC/2017 ஊழல் தடுப்பு சட்டம்-1988 பிரிவுகள் 7 மற்றும் 12-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...

03.11.2017-ந்தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1500 மணிக்கு நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், O.சௌதாபுரம், ஒலைப்பட்டி கிராமத்தை சேர்ந்த துரைசாமி மகன் D.சுரேஷ் என்பவர் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி, காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களிடம் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட ஒரு புகார் மனுவை சமர்ப்பித்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு :

அனுப்புதல்

D.சுரேஷ்,
த/பெ.துரைசாமி,
D.No.4/12 ஒலைப்பட்டி,
ஓ.சௌதாபுரம்-637505
வெண்ணந்தூர், இராசிபுரம் தாலுக்கா,
நாமக்கல் மாவட்டம்.

பெறுதல்

காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
நாமக்கல்.

ஐயா,

நான் ஒலைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் B.E.(EEE) படித்துள்ளேன். Green Way Solar Power System என்ற பெயரில் சோலார் பொருட்கள் Sales and Service தொழில் செய்து வருகிறேன். எனது ஒன்றுவிட்ட சித்தப்பாவின் பெயர் இளங்கோவன். அவர் மின்னக்கல் அரசு தொடக்கப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். அவரது அப்பா காளியண்ணன் ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்று சுமார் 13 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அவரது அம்மா கமலம் சுமார் 8 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். எனது சித்தப்பாவின் பராமரிப்பில் இருந்த அவரது ஒரே அக்கா

கலைச்செல்வி கண்பார்வை இல்லாத உடல் ஊனமுற்றவர் கடந்த 3 மாதங்களுக்கு முன் இறந்துவிட்டார். இவர்களுக்கு சொந்தமாக பூர்வீக வீடு ஒன்று ஓலைப்பட்டியில் இருக்கிறது. எனவே எனது சித்தப்பா இளங்கோவன் அவர்களுக்கு வாரிசு சான்றிதழ் தேவைப்பட்டது. அவருக்கு லீவு அடிக்கடி கிடைக்காததால், செப்டம்பர் மாத இறுதியில் அவர் தேவையான ஆவணங்களை இணைத்து இராசிபுரம் தாசில்தார் அவர்களுக்கு மனு ஒன்று எழுதி அதை என்னிடம் கொடுத்து வாரிசு சான்றிதழ் வாங்கிக் கொடுக்க உதவுமாறு கேட்டுக்கொண்டார். நானும் எனது வீட்டிற்கு பட்டா வாங்குவது சம்பந்தமாக இராசிபுரம் தாசில்தார் அலுவலகம் சென்ற விதத்திலும் தாசில்தாரின் சொந்த தேவைக்கு சோலார் பொருட்கள் கொடுத்த விதத்திலும் எனக்கு ராசிபுரம் தாசில்தார் அவர்களை அறிமுகம் உண்டு. எனவே நானும் எனது சித்தப்பாவின் மனுவை தாசில்தார் அலுவலகத்தில் கொடுத்தேன். அதன் பின்னர் அக்கரைப்பட்டி VAO மற்றும் வெண்ணந்தூர் RI ஆகியோர் எனது சித்தப்பாவின் மனுவின் பேரில் விசாரணை செய்து அறிக்கையுடன் இராசிபுரம் தாசில்தார் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இது தொடர்பாக நான் 26.10.2017-ஆம் தேதி காலை சுமார் 10 மணியளவில் இராசிபுரம் தாலுக்கா அலுவலகம் சென்று தாசில்தார் திரு.ரத்தினம் அவர்களை சந்தித்து வாரிசு சான்று வழங்குமாறு கேட்டேன். அதற்கு அவர் இந்தமாதிரி வாரிசு சான்றிதழுக்கு மற்றவர்களிடம் ரூ.20,000/- வாங்குகிறேன், நீ தெரிஞ்ச பையன் என்பதால் ரூ.15,000/- கொடு என்று கேட்டார். நான் அவரிடம் இது என்னுடைய சித்தப்பா மனுதான் அதனால் பார்த்து செய்துகொடுங்கன்னு கேட்டேன். அதற்கு நீ தெரிஞ்ச பையங்கிறதாலதான் 15,000/- ரூபாய் என்று சொன்னார். மேலும் எனது சித்தப்பா நேரில் வந்து ஒரு கையெழுத்துபோட வேண்டும் என்றும் சொன்னார். எனவே அன்றே மாலை சுமார் 3 மணிக்கு எனது சித்தப்பா இளங்கோவனை அழைத்துக்கொண்டு இருவரும் சென்று தாசில்தார் திரு.ரத்தினம் அவர்களை பார்த்தோம். அப்போதும் தாசில்தார் ரூ.15,000/- கொடுக்கவேண்டும் என்று கேட்டார். எனது சித்தப்பா என்னிடம் அவ்வளவு பணம் ரெடி பண்ணமுடியாது என்ன செய்வது என்று கேட்டார். நான் மீண்டும் தாசில்தாரை கேட்டுக்கொண்டதால் சரி ரூ.10,000/- கொடு என்றுகேட்டார். பின்பு நாங்கள் இருவரும் வந்துவிட்டோம். மீண்டும் 02.11.2017ம் தேதி மதியம் சுமார் 1 மணிக்கு நான் தாசில்தார் அலுவலகம் சென்று தாசில்தார் திரு.ரத்தினம் அவர்களை சந்தித்தபோது ரூ.10,000/- கொடுத்துடுங்க செஞ்சுகொடுத்திடறேன் அதற்கு கீழ முடியாதுன்னு சொல்லிட்டு ஜி3 இருக்கையில் சென்று கையெழுத்துபோட்டு file ஐ வாங்கிவரும்படி சொன்னார். நானும்

ஜி3 இருக்கையில் சென்று எனது சித்தப்பாவின் வாரிசு சான்றிதழ் மனு பற்றி கேட்டபோது அந்த சீட்டு பார்க்கும் பாலச்சந்தரன் என்ற Clerk என்னிடம் தாசில்தார் கையெழுத்து போடறேன்னு சொன்னாரா என்று கேட்டார். அதற்கு நான் அவர் போடறேன்னு சொல்லிட்டார், உங்களிடம் எழுதி கையெழுத்து வாங்கி எடுத்திட்டு வரச்சொன்னார் என்று சொன்னேன். அதற்கு பாலச்சந்தரன் எனக்கு ரூ.5000/- கவனிச்சிடுங்க நான் எழுதி கொடுக்கறேன்னு சொன்னார். அதன்பின் நான் திரும்பி வந்து இந்த விசயத்தை எனது சித்தப்பா இளங்கோவனிடம் சொன்னேன். அதற்கு அவர் லஞ்சமாக அவர்களுக்கு பணம் கொடுக்கக்கூடாது. அதனால் என்னை லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் புகார் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். எனக்கும் தாசில்தார் ரத்தினம் மற்றும் கிளர்க் பாலச்சந்திரன் ஆகியோர்களுக்கு அவர்கள் கேட்டமாதிரி லஞ்சமாக பணம் கொடுத்து எனது சித்தப்பாவின் வேலையை முடித்துக்கொடுக்க விருப்பம் இல்லை. ஆகவே என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட இராசிபுரம் தாசில்தார் ரத்தினம் மற்றும் clerk பாலச்சந்தரன் ஆகியோர்களின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம்)னு.சுரேஷ், நாள்: 03.11.2017.

மேற்கண்ட புகார் மனுவை பெற்று, புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் செய்யப்பட்டுள்ளதா என்றும், குற்ற அலுவலர்கள் கையூட்டு கேட்பதை உறுதி செய்யும் பொருட்டும் ஒரு முன்விசாரணைக்கு உத்திரவிடக்கோரி, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்திற்கு, மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக எண்.PE.372/2017/REV/NK, நாள்.03.11.2017-ல் கண்ட உத்திரவுபடி, 03.11.2017-ந் தேதி பிற்பகல் 15.10 மணிக்கு குற்ற அலுவலர்கள் திரு.ரத்தினம், வட்டாட்சியர் மற்றும் திரு.பாலசந்திரன் கிளர்க் ஆகியோர்கள் மீது ஒரு முன்விசாரணை பதிவு செய்யப்பட்டது. அந்த முன்விசாரணையில், திரு.இளங்கோவன் அவர்களுக்கு வாரிசு சான்றிதழ் வழங்க குற்ற அலுவலர் திரு.ரத்தினம், வட்டாட்சியர் அவர்கள் புகார்தாரர் திரு.D.சுரேஷிடம், கிளர்க் திரு.பாலசந்திரன் அவர்களுக்கு ரூ.1,000/- கொடுத்துவிட்டு, அவரிடம் உள்ள திரு.இளங்கோவன் அவர்கள் பெயரில் உள்ள கோப்பை எழுதி வாங்கிக்கொண்டு அந்த கோப்பை தன்னிடம் கொண்டு வந்து கொடுக்குமாறும் மேலும், தனக்கு கொடுக்கவேண்டிய பணத்தை கொடுக்குமாறும் அவர் கேட்டது உறுதி செய்யப்பட்டது. அதேபோல், கிளர்க் பாலசந்திரன் அவர்களும் புகார்தாரர் திரு.D.சுரேஷ் அவர்களிடம்,

தனக்கு தனியாக ரூ.5,000/- கொடுத்தால் அந்த கோப்பை வட்டாட்சியருக்கு அனுப்பி வைப்பதாக கூறியது உறுதி செய்யப்பட்டது.

ஆகவே, எதிரிகள் இருவர் மீதும் குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதாக முன்விசாரணையில் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 04.11.2017-ந்தேதி பிற்பகல் 16.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண்.7/AC/2017 ஊழல் தடுப்பு சட்டம்-1988 பிரிவுகள் 7 மற்றும் 12-ன்படி எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் நாமக்கல் மாவட்ட சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

4/11/17

(GV.கிருஷ்ணா ராஜன்)
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.